**தலைப்பு 229 – சட்டமா அதிபர் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 229 – சட்டமா அதிபர் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 செப்தம்பர் 22 ஆம் திகதி சட்டமா அதிபருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வினதும், கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பனவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

சட்டமா அதிபர் திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 1,268.12 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 746.22 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 521.90 மில்லியன் அதாவது 41.16 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 657.62 | 655.07 | 2.55 | 0.39 |
| மூலதனம் | 610.50 | 91.15 | 519.35 | 85.07 |
| மொத்தம் | **1,268.12** | **746.22** | **521.90** | **41.16** |

## 2.2 வருமானக் கணக்கு

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

திணைக்களத்தினால் 2015 ஆம் ஆண்டிற்காக வருமானக் குறியீடு ஒன்றிற்காக ரூபா 35.30 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 32.59 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 92.32 சதவீதமாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமானக் குறியீடு | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | மதிப்பீட்டின் சதவீதமாக பற்றாக்குறை |
|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | பற்றாக்குறை | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 20.03.02.11 | 35.30 | 32.59 | 2.71 | 7.68 |

## 2.3 முற்பணக் கணக்கு

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள்**

சட்டமா அதிபர் திணைக்களத்திற்குரிய 22901 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 23.00 | 15.66 | 11.50 | 15.27 | 80.00 | 41.99 |

### 2.4 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்தின் கீழான 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 7002/0000/00/0137/0015/000 ஆம் கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 11.13 மில்லியனாக இருந்தது.

### 2.5 பொது வைப்புக் கணக்குகள்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 6000/0000/00/0018/0047/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்குகளின் மீதி ரூபா 1.64 மில்லியனாக இருந்தது.

### 2.6 கணக்காய்வு அவதானிப்புக்கள்

சட்டமா அதிபர் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கூற்றுக்கள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டுத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

திணைக்களத்தால் பின்வரும் பதிவேடுகள் நாளதுவரையாக்கப்பட்டு பராமரிக்கப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| கணனிகள், உபபாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை |
| இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |

**3.2 வருமானக் கணக்கு**

வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக 20.03.02.11 ஆம் இலக்க கூட்டுத்தாபன மற்றும் நியதிச்சட்ட சபைகளிலிருந்து சட்டக் கட்டண வருமானக் குறியீடுகளுக்குரிய வருமான மதிப்பீடுகளைத் தயாரித்தல், வருமானங்களைச் சேகரித்தல், கணக்கு வைத்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பித்தல் போன்ற செயற்பாடுகள் கையளிக்கப்பட்டிருந்தன. அவ்வருமானக் குறியீட்டிற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டின் உள்ளவாறான வருமானத்தை விட மீளாய்வாண்டின் உள்ளவாறான வருமானக் குறைவு ரூபா 3.5 மில்லியனாக இருந்தது. கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கின் பிரகாரம் நிலுவை வருமானம் ரூபா 148,012,188 என காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்த விடயங்களின் பிரகாரம் அது ரூபா 195,676,745 ஆக மாத்திரம் இருந்தது. அதன் பிரகாரம் கணக்கிடப்படாத நிலுவை வருமானம் ரூபா 47,664,557 ஆக இருந்தது.

(ஆ) நிதிப்பிரமாணம் 128(2)(உ) இன் பிரகாரம் அரச வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரால் அரசிற்கு கிடைக்க வேண்டியிருந்த நிலுவை வருமானம் தாமதமின்றி அறவிடுவது தொடர்பாக விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் நிலுவை வருமானம் ரூபா 195,676,745 ஆக இருந்ததுடன், அதன் பிரகாரம் காலப்பகுப்பாய்வு கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமானம் நிலுவையாக இருந்த காலப்பகுதி | நிலுவை வருமானம் |
|---|---|
| | ரூபா |
| 1 ஆண்டிற்கு குறைய | 25,868,150 |
| 1 ஆண்டிற்கு மேல் 3 ஆண்டுகளுக்கு குறைய | 85,990,918 |
| 3 ஆண்டுகளுக்கு மேல் 6 ஆண்டுகளுக்கு குறைய | 47,682,512 |
| 6 ஆண்டுகளுக்கு மேல் 9 ஆண்டுகளுக்கு குறைய | 28,853,775 |
| 9 ஆண்டுகளுக்கு மேல் | 7,281,390 |
| மொத்தம் | 195,676,745 |

(இ) 1 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் நிலுவை வருமானம் ரூபா 169,808,595 ஆக இருந்ததுடன், நிலுவை வருமானம் உரிய நிறுவனங்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடப்பட்டு காலப்பகுப்பாய்வு கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமானம் நிலுவையாக இருந்த காலப்பகுதி | நிறுவனங்களின் எண்ணிக்கை | நிலுவை வருமானம் |
|---|---|---|
| ரூபா இலட்சம் | | ரூபா |
| 5 இற்கு குறைய | 124 | 12,862,084 |
| 5 இற்கு மேல் 10 இற்கு குறைய | 18 | 11,933,258 |
| 10 இற்கு மேல் 50 இற்கு குறைய | 11 | 27,252,753 |
| 50 இற்கு மேல் 100 இற்கு குறைய | 05 | 36,556,860 |
| 100 இற்கு மேல் | 03 | 81,203,640 |
| மொத்தம் | | 169,808,595 |

## 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

22901 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,372,217 ஆக இருந்ததுடன் 2016 செப்தெம்பர் 13 ஆந் திகதி அளவிலும் அந் நிலுவையான மீதிகள் 1 ஆண்டு முதல் 20 ஆண்டுகள் வரையான காலப்பகுதியிலிருந்து இருந்து வந்திருந்த போதிலும், அம்மீதிகளை 2016 செப்தெம்பர் 13 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

தாபனவிதிக் கோவையின் IV ஆம் அத்தியாயத்தின் 13.6 ஆம் பிரிவின் பிரகாரம் அரச உத்தியோகத்தரொருவருக்கு ஆண்டிற்கு ஒரு தடவை மாத்திரம் விழா முற்பணம் செலுத்த முடியுமாக இருந்த போதிலும், அதற்கு முரணாக உத்தியோகத்தரால் விழா முற்பணத்தைப் பெற்றுக்கொண்டு ஓராண்டு கழிவதற்கு முன்னர் திணைக்களத்தினால் விழா முற்பணம் செலுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

## 3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4.2 உள்ளகக் கணக்காய்வு

திணைக்களத்தின் 2015 ஆம் ஆண்டின் போது தேறிய நிதிஏற்பாடு ரூபா 1,268 மில்லியன் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 866 ஆக இருந்ததுடன், 2015 திசெம்பர் 31 இல் மொத்த சொத்துக்களின் பெறுமதி ரூபா 727 மில்லியனாக இருந்தது. நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் 2015 ஆண்டிற்காக உள்ளகக் கணக்காய்வொன்று திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.5 வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஒக்தோபர் 17 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ் அறிக்கை 2016 மார்ச் 17 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2016 யூன் 27 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளின் பிரகாரம் 125 பிரிவுகளில் 50 பிரிவுகளில் தெரிவுக் கணக்காய்வுப் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. அதன் பிரகாரம் மிகைகள் மற்றும் குறைகள் அதிகளவில் அவதானிக்கப்பட்டன. சுட்டிக்காண்பிக்கப்பட்ட மிகைகள் பற்றாக்குறைகள் மற்றும் செய்யப்பட்ட ஏனைய பரிந்துரைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் 2016 யூன் 27 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சட்டமா அதிபர் திணைக்களத்திற்குரிய சட்டத்தரணிகள் அலுவலகங்கள் ஒவ்வொரு உயர் நீதிமன்றத்திலும் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் 14 பிரதேசங்களில் உத்தியோகபூர்வ இல்லங்களும் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் போது மேற்குறித்த அலுவலகங்கள் மற்றும் உத்தியோகபூர்வ விடுதிகளிலும் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.6 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்தல்**

செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடல். செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடல் மற்றம் செயற்திட்ட தாமதங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடல்**

திணைக்களத்தினால் பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட வேண்டிய திகதி | ஆரம்பிக்கப்படாமைக்கான காரணம் |
|---|---|---|---|
| | ரூபா | | |
| வழக்கறிஞர் உத்தியோகபூர்வ இல்லத்தை நிர்மாணித்தல் - குருணாகல் | 26,500,000 | 2015.06.15 | ஆரம்ப திட்ட நடவடிக்கைகள் பூர்த்தி செய்வதற்கு சிரமமாக இருந்தமை, தரைப்படை மூலம் அனைத்து நிர்மாணங்களும் எதிர்பார்க்கப்பட்ட போதிலும் பின்னர் அந்நிலைமை மாற்றமடைந்தமையால் தரைப் படையால் நிர்மாணிப்பதற்கு முடியாமல் இருந்தது. |

**(ஆ) செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்யாது கைவிடல்**

திணைக்களத்தினால் கீழே காட்டப்பட்டுள்ள செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யாது கைவிடப்பட்டிருந்தன.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | 2015 திசெம்பர் 31 வரையான செலவினம் | கைவிடப்படாமைக்கான காரணம் |
|---|---|---|---|---|
| | ரூபா | | ரூபா | |
| வழக்கறிஞர் உத்தியோகபூர்வ இல்லத்தை நிர்மாணித்தல் - கண்டி | 26,500,000 | 2015.06.15 | 223,417 | ஆரம்ப திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு திசெம்பர் மாதம் வரை தாமதித்தமை மற்றும் நிர்மாணிப்பதற்கு தரைப்படையை ஈடுபடுத்த முடியாமல் இருந்தமை. |

**(இ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

திணைக்களத்தினால் கீழே காட்டப்பட்டுள்ள செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டது.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி | பூர்த்தி செய்யப்பட்ட திகதி | 2015 திசெம்பர் 31 வரையான செலவினம் | தாமதித்தமைக்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | | | | ரூபா | |
| சட்டமா அதிபர் திணைக்களத்தின் புதிய கட்டிட நிர்மாணம் | 1,182.00 | 2015.01.01 | 2017.12.31 | பூர்த்தி செய்யப்படவில்லை | 23,489,755 | அமைச்சரவை நிதிஏற்பாட்டு குழு இல்லாமல் போனமை. அமைச்சரவை அங்கீகாரம் 2015/07/29 இல் கிடைத்தமை |
| வழக்கறிஞர் உத்தியோகபூர்வ இல்லத்தை நிர்மாணித்தல் வவுனியா, மன்னார் | 53.00 | 2015.06.15 | 2015.12.31 | பூர்த்தி செய்யப்படவில்லை | 19,541,311 | குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. |

**3.7 செயலாற்றல்**

2015 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தின் செயலாற்றல் தொடர்பான நிலைமை கீழே காட்டப்பட்டுள்ளது.

| பிரிவு | ஆண்டில் திறக்கப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை | சட்டதரணி பிரிவுகளுக்கு அனுப்பிய கோவைகள் | வேலை பூர்த்தி செய்யப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை | 2015 திசெம்பர் 31 இல் வேலை பூர்த்தி செய்யப்படாத கோவைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிவில் பிரிவு | 2719 | 2192 | 171 | 356* |
| குற்றவியல் பிரிவு | 4791 | - | 3473 | 12983 |
| கூட்டுத்தாபன பிரிவு | 1681 | - | 1871 | 5365 |
| பொதுமக்கள் முறைப்பாட்டுப் பிரிவு | 591 | - | 35 | 217* |
| பெண்கள் மற்றும் சிறுவர்கள் துஷ்பிரயோக வழக்குப் பிரிவு | 3338 | - | 1801 | 17709 |
| அரச சட்டத்தரணிகள் பிரிவு | 165 | - | 3315 | சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| உயர் நீதிமன்ற அலகு | 508 | - | 532 | சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |

*2015 ஆம் ஆண்டிற்குரிய எஞ்சியவைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சிவில் துறையிடமிருந்து திறக்கப்படும் கடித கோவைகளில் அநேகமானவை சட்டத்துறைக்கு தொடர்புபடுத்தப்படுவதுடன் கோவைகளின் பின்தொடர் நடவடிக்கை சிவில் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) குற்றவியல் வழக்குகள் மற்றும் பெண்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோக வழக்குகள் தொடர்பான வேலை முடிவடையாத ஆவணங்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்திருந்ததுடன் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை முடிவடையாத கோவைகளின் எண்ணிக்கை குற்றவியல் பிரிவில் 12,983 ஆகவும் பெண்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோக வழக்குப் பிரிவில் 17,709 ஆகவும் இருந்தன.

## 3.8 மனித வளங்கள் முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர்களின் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 401 | 192 | 209 |
| (ii) | மூன்றாம் நிலை | 12 | 10 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 193 | 120 | 73 |
| (iv) | ஆரம்ப நிலை | 255 | 232 | 23 |
| | **மொத்தம்** | **861** | **554** | **307** |

130 உதவி அரச சட்ட (தகுதிகாண்) உத்தியோகத்தர்களுக்கு மாதாந்தம் ரூபா 26,000 ஆன படியொன்று கொடுப்பனவு செய்தல் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு 2014 மார்ச் 12 ஆந் திகதியும் 28 கனிஷ்ட உதவி அரச சட்டப் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு 2014 யூன் 16 ஆந் திகதியும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது, எனினும் திணைக்களத்தினால் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 12 உதவி அரச சட்டத்தரணி (Assistant State Atterney) பதவிகளும் 27 சுருக்கெழுத்தாளர்கள் பதவிகளும் வெற்றிடங்களாக காணப்பட்டன. இவ்வெற்றிடங்கள் திணைக்களத்தின் செயலாற்றல் தொடர்பில் தாக்கமளித்திருந்தன.

.